Chapter XXIII code Criminal Procedure)

IN THE COURT OF : JUDICIAL MAGISTRATE No.I COURT, NAGAPATTINAM

Calendar

Miscellaneous

Preliminary Register CC 125/2023 **DCB காவல்நிலையம் நாகப்பட்டினம்**

Sessions

Deposition of witness for : (PW 3 , LW 3 )

| | | | |
|---|---|---|---|
| Name : | ராஜேஷ் | Village / Taluk : | |
| Fathers Name | பாஸ்கரன் | Caste / Religion : | |
| or Husband Name: | | Age / Calling : | 40 |

Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of **26.06.2024**

**1 ஆம் எதிரி ஆஜர். 2 ஆம் எதிரி ஆஜரில்லை. 2 ஆம் எதிரி சார்பில் குவிமுச பிரிவு 317 ,இன் கீழான மனுதாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.**

**முன் விசாரணை**

நான் தற்போது மயிலாடுதுறையில் குடியிருந்து, எனது அம்மாவிற்கு சொந்தமான விஜயா திரை அரங்கம் நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். மேலும் எதிரி பாலாஜி யை தெரியாது . அசா-1 தினகர் என்பவரை தெரியும். அசா-1 க்கு சொந்தமான நாகப்பட்டினம் தேவி திரையரங்கை எதிரி 2018 இல் குத்தகைக்கு பெற்றார். குத்தகை காலம் 4 ஆண்டுகள் ஆகும். மேற்படி குத்தகைக்கு ரூ,13 இலட்சம் முன்தொகையாக பெறப்பட்டது. ஒரு நாள் வாடகையாக ரூ3600/- நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. மேற்படி குத்தகையானது 2022 இல் முடிவுற சிறிது காலத்திற்கு முன்பு ஆஜர் எதிரி குத்தகை காலம் முடிவுறவில்லை என்று அறிவிப்பு அனுப்பி உள்ளார். அசா-1 ஏற்படுத்தி கொடுத்ததாக எதிரி போலியாக ஒரு குத்தகை ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளார். அந்த போலியான ஒப்பந்தத்தை பயன்படுத்தி எதிரி வழக்கை தாக்கல் செய்துள்ளார். இது சம்பந்தமாக எதிரி அசா-1 ஐ நேரில் மிரட்டியுள்ளார். இது தொடர்பாக அசா1

இந்த வழக்கு புகாரினை கொடுத்துள்ளார். மேலும் அசா1 சிங்கப்பூர் நாட்டில் இருந்த பொழுது, எதிரி காலநீட்டிப்பு செய்ததாக கண்டு, எழுதி அதில் அசா1 இன் கையொப்பத்தினை இட்டுள்ளார். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

அசா1 ஐ எதிரி மிரட்டியதாக எனக்கு நேரடியாக  தெரியாது என்றால் சரி. திரைஅரங்கிற்கு ஒரு நாள் வாடகையாக ரூ3600/- நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. என்று நேரடியாக தெரியாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசா1 சிங்கப்பூர் நாட்டில் இருந்த பொழுது, எதிரி காலநீட்டிப்பு செய்ததாக கண்டு, எழுதி அதில் அசா1 இன் கையொப்பத்தினை இட்டுள்ளார் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதே போல அசா-1 ஏற்படுத்தி கொடுத்ததாக எதிரி போலியாக ஒரு குத்தகை ஒப்பந்தம் ஏற்படுத்தி அதனை பயன்படுத்தி எதிரி வழக்கை தாக்கல் செய்துள்ளார்என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தற்போது முதல் விசாரணையில் சொல்லிய சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும்  சொன்னேன் என்றால் சரி.

Chapter XXIII code Criminal Procedure)

IN THE COURT OF : JUDICIAL MAGISTRATE No.I COURT, NAGAPATTINAM

Calendar

Miscellaneous

Preliminary Register CC 125/2023 **DCB காவல்நிலையம் நாகப்பட்டினம்**

Sessions

Deposition of witness for : (PW 2 , LW 2 )

| | | | |
|---|---|---|---|
| Name : | தேவதாஸ் | Village / Taluk : | |
| Fathers Name | | Caste / Religion : | |
| or Husband Name: | | Age / Calling : | 64 |

Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of **26.06.2024**

**1 ஆம் எதிரி ஆஜர். 2 ஆம் எதிரி ஆஜரில்லை. 2 ஆம் எதிரி சார்பில் குவிமுச பிரிவு 317 ,இன் கீழான மனுதாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.**

**முன் விசாரணை**

நான் தற்போது மயிலாடுதுறையில் குடியிருந்து, விஜயா திரை அரங்கில் மேலாளராக பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். மேலும் எதிரி பாலாஜி யை தெரியும். அசா-1 தினகர் என்பவரை தெரியும். நான் கடந்த 2008 ஆம்ஆண்டு முதல் மேற்படி திரையரங்கில் பணியாற்றி வருகிறேன். எனது முதலாளியின் பெயர் விஜயா. அவரது மகளின் பெயர் தேவி ஆகும். தேவி அவர்கள் அசா-1 தினகரனின் மனைவி ஆவார். மேற்படி தினகர் தேவி திரையரங்கை விலைக்கி வாங்கினார். கடந்த 2016 ஆம் ஆண்டு மேற்படி தேவி திரையரங்கை 2016 முதல் 2018 வரை ஆஜர் எதிரிக்கு குத்தகைக்கு கொடுத்துள்ளார். குத்தகை 2018 ஆம் ஆண்டு முடிவுற்றதால் , மேலும் 4 ஆண்டுகளுக்கு எதிரிக்கு மேற்படி திரையரங்கானது குத்தகைக்கு தினகர் அவர்களால் கொடுக்கப்பட்டது. மீண்டும் குத்தகை முடிவுற்றதால் குத்தகையானது கால நீடிப்பு செய்யப்பட்டதாக தினகர் அவர்கள் என்னிடம் சொன்னார். மேற்படி நீடிப்பு செய்யப்பட்ட

குத்தகை முடிவுற இரண்டு மாதங்கள் இருக்கும் தருவாயில் , மேலும் 1 வருடம் காலம் இருப்பதாக கூறி , எதிரி அறிவிப்பு அனுப்பியதாக தினகர் அவர்கள் என்னிடம் சொன்னார். மேற்படி குத்தகைக்கு ரூ,13 இலட்சம் முன்தொகையாக பெறப்பட்டது. ஒரு நாள் வாடகையாக ரூ3600/- நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. ஆஜர் எதிரி குத்தகை பத்திரத்தில் போலியாக மேலும் 1 ஆண்டுக்கு கால நீடிப்பு செய்ததாக தனது கையொப்பத்தினை போட்டுள்ளார் என்று தினகர் அவர்கள் என்னிடம் சொன்னார். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரி. முதல் விசாரணையில் சொல்லிய சங்கதிகளை தான் போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரி. சம்பவம் பற்றி எனக்கு தெரியாமல் 1வது எதிரிக்கு எதிராக அசா-1 எனது முதலாளியின் மருமகன் என்பதால் எதிரி போலியாக அசா-1 இன் கையொப்பம் இட்டு குத்தகை ஒப்பந்ததில் கால நீடிப்பு செய்ததாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Chapter XXIII code Criminal Procedure)

IN THE COURT OF : JUDICIAL MAGISTRATE No.I COURT, NAGAPATTINAM

Calendar

Miscellaneous

Preliminary Register CC 125/2023 **DCB காவல்நிலையம் நாகப்பட்டினம்**

Sessions

Deposition of witness for : (PW 1 -LW 1)

| | | | |
|---|---|---|---|
| Name : | தினகரன் | Village /Taluk : | |
| Fathers Name | | Caste /Religion : | |
| or Husband Name: | | Age /Calling : | 56 |

Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of **26.06.2024**

**1 ஆம் எதிரி ஆஜர். 2 ஆம் எதிரி ஆஜரில்லை. 2 ஆம் எதிரி சார்பில் குவிமுச பிரிவு 317 ,இன் கீழான மனுதாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.**

**எதிரியின் மனுவின் பேரில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கை பொறுத்தவரையில் 22.09.2018 தேதியிட்ட 4 வருடத்திற்கான குத்தகை ஆவணம் அசல் என்றும், 22.09.2018 தேதியிட்ட 11 மாதத்திற்கான குத்தகை ஆவணம் போலி என்றும் சொன்னால் சரி. கடந்த 04.08.2022 அன்று நான் கொடுத்த புகாரில் மேற்கண்ட இரண்டு ஆவணங்களையும் நான் இணைத்து கொடுத்தேன். 04.08.2022 முதல் வழக்கு பதிவு செய்த 26.08.2022 தேதிக்குள் DCB போலிசார் அழைத்து விசாரணை செய்தார்கள் . எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் சரியாக நினைவில் இல்லை. எதிரியை மேற்படி விசாரணைக்கு போலிசார் அழைத்தார்கள் ஆனால் அவர் வரவில்லை. 06.08.2022 மற்றும் 07.08.2022 ஆகிய தேதிகளில் நடைபெற்ற விசாரணையில் எதிரியும் என்னுடன் விசாரணைக்கு வந்தார் என்றால் சரியல்ல. 11 மாதத்திற்கான குத்தகை ஆவணத்தினை நான் தான் ஏற்படுத்தி தந்தேன் என்று கூறியுள்ளதால், எதிரி விசாரணைக்கு போலிசார் அழைத்தும் அவர் வரவில்லை என்று நான்

பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 11 மாதத்திற்கான குத்தகை ஆவணத்தில் 2020-2021, ஆகிய காலகட்டங்களில் நான் வெளிநாட்டில் இருந்த காரணத்தினால் இந்த ஆவணத்தில் காலநீடிப்பு செய்யவில்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 2022 ஆண்டு தான் நான் வெளிநாட்டிற்கு சென்றேன். விசாரணையின் போது, போலிசார் எனது கடவுச்சீட்டை கேட்டதற்கு கோவை விமான நிலையத்தில் எனது உறவினர் சொக்கலிங்கம் என்பவரிடம் அதனை கொடுத்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

கடந்த 01.07.2022 தேதியன்று தேவி திரையரங்கத்தில் அதனை விற்பனை செய்வதற்கு நாராயணி நிதி நிரூபணர் அதிபர் திரு. கார்த்திகேயன் வசம் நான் அட்வான்ஸ் தொகை பெற்றேனா என்றால் இல்லை. திரையரங்கை அவரிடம் விற்க நான் முயற்சி செய்தேனா என்றால் இல்லை. நாகப்பட்டினம் மாவட்ட நீதிமன்றத்தில் COS 100/2022 வழக்கில் நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் மற்றும் இடைக்கால மனுக்களின் எதிர் உரையில் திரையரங்கை திரு. கார்த்திகேயன் வசம் விற்க நான் முயற்சி செய்தேன் என்று கூறியுள்ளேனா என்றால் தெரியவில்லை. மேற்படி திரு. கார்த்திகேயன் எனது மனைவி குடும்பத்திற்கு சொந்தமான குழந்தை விஜயா என்ற திரையரங்கத்தை விலைக்கு வாங்கியுள்ளார் என்றால் சரி. அவர் BJB அரசியல் கட்சியில் முக்கிய பொறுப்பிலும், உள்நாட்டு விமான சேவை பிரிவில் முக்கிய பொறுப்பில் வகிக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

நான் DCB போலிசாரிடம் எனது கடவுச்சீட்டையின் நகலை எப்பொழுது ஒப்படைத்தேன் என்று நினைவில் இல்லை. ஆனால் ஒப்படைத்துள்ளேன். இந்த நீதிமன்றத்திலும், மாவட்ட நீதிமன்றத்திலும் எதிரியின் பிணை மனு , முன்பிணை மனுவிற்கு நான் ஆட்சேபனை தாக்கல் செய்தேன். அவ்வாறு தாக்கல் செய்த ஆட்சேபனையில் நான் எனது கடவுசீட்டின் நகலை தாக்கல் செய்தேனா என்றால் பிணைமனுக்களில் தாக்கல் செய்தேனா என்று நினைவில்லை. ஆனால் அசல் வழக்கில் தாக்கல் செய்தேன். எனது கடவுசீட்டில் 16.05.2022, 22.05.2022 ஆகிய தேதிகளில் திருச்சி விமான நிலைய முத்திரை போலியாக இடப்பட்டுள்ளதால் உரிய காலக்கெடுவிற்குள்

தாக்கல் செய்யாமல் தவித்து வந்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது கடவுசீட்டில் இவ்வாறு முத்திரை போலியாக இடப்பட காரணம் கார்த்திகேயன் மற்றும சொக்கலிங்கம் என்பதால் தான் அவர்களை தொடர்பு படுத்தி நான் சாட்சியம் அளிக்க மறுக்கிறேன் என்றால் சரியல்ல. சொக்கலிங்கத்தின் சகோதரர் வைரவன் என்பவர் 21.08.2019 தேதியிட்ட 11 மாத குத்தகை நீட்டிப்பில் சாட்சி கையொப்பமிட்டுள்ளார் என்பது சரியல்ல. மேற்படி 11 மாத குத்தகை பத்திரத்தில் என்னால்தான் தேதி நிர்ணயம் செய்யப்பட்டது என்றும், எதிரியால் நிர்ணயம் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. புகாருடன் 4 வருடம் மற்றும் 11 மாத காலத்திற்காக 2 குத்தகை ஆவணங்களை ஒப்படைத்ததாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி 4 வருட குத்தகை ஆவணத்தில் யாரும் சாட்சி கையொப்பம் செய்யப்படவில்லை. அதன் அசலை நான் DCB போலிசாரிடம் ஒப்படைத்தேன். அதை நான் ஒப்படைக்கவில்லை என்று சரியல்ல. அந்த ஒப்பந்தம் போலியானது என்று எதிரி கொடுத்த புகாரின்பேரில் போலிசார் எனது செல்வாக்கு காரணமாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால்சரியல்ல.

நானும் எனது மனைவி குடும்பமும் திரையரங்க, திரைப்பட விநியோக தொழில் 50 வருடங்களுக்கு மேலாக ஈடுபட்டு வருகிறோம் என்றால் சரிதான். தமிழ்நாடு முழுவதும் எனக்கு 1, எனது மனைவி குடும்பத்தாருக்கு 3 திரையரங்குகள் இருந்தது. தற்போது எனது மனைவி குடும்பத்தாருக்கு 2 திரையரங்குகள் உள்ளது. 11 மாத குத்தகைக்கு பத்திரப்பதிவு தேவையில்லை, 4 வருட குத்தகைக்கு பத்திரப்பதிவு தேவை என்ற விபரம் வழக்குக்கிற்கு பின்னிட்டு தெரியும். இதுப்பற்றி வழக்கிற்கு முன்பே தெரிந்த காரணத்தினால் தான் நான் எதிரிக்கு 11 மாத குத்தகை ஏற்படுத்தி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

எதிரிக்கு அவர் திரையரங்கை புதுப்பிக்க செலவு செய்த தொகையை நான் தரமறுத்து, திரையரங்கை உடனடியாக விற்பனை செய்ய முடிவு செய்து மேற்படி 11 மாத குத்தகையை மறுத்து சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல. 11 மாத குத்தகை ஆவணத்தினை நான் வழக்கிற்கு பின்னிட்டு தான் படித்து பார்த்தேன். அதில் திரையரங்கு தனக்கு உரிமையானது என்றோ,

திரையரங்கை என்னிடம் பறிப்பதாக கண்டு எந்த வாசகமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கினை பின்னிட்டு எதிரியை திரையரங்கிலிருந்து வெளியேற்ற நான் அடி ஆட்களுடன் காலை 10.30 மணியளவில் சென்றதாக வெளிப்பாளையம் காவல்நிலையத்தில் எதிரியால் புகார் கொடுக்கப்பட்டு, அதில் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் நான் திரையரங்கில் வேலை செய்ய சென்றேன், ஆனால் எதிரி பொய்யாக புகார் கொடுத்துவிட்டார். மேற்படி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

கடந்த 13.10.2022 ம் தேதி எதிரியை போலிசார் சட்டத்திற்கு புறம்பாக அழைத்து வந்து திரையரங்கை என்னிடம் ஒப்படைக்க கூறியதற்கு எதிரி மறுக்கவே ஆவணங்கள் ஜோடிக்கப்பட்டு அவர் மீது இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. திரையரங்கிற்கு என தனியாக வருமான வரி கணக்கு இல்லை எனது பெயரில்தான் உள்ளது. எனது வருமான வரி கணக்கில் திரையரங்கின் ஒரு நாள் வாடகை ரூ.3,600/- என சொல்லப்பட்டுள்ளது. எனது வருமான வரி கணக்கினை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேனா என்றால் இல்லை. எனது வருமான வரி கணக்கில் திரையரங்கின் ஒரு நாள் வாடகை ரூ.1,000/- என சொல்லப்பட்டுள்ள காரணத்தினால் தான் நான் எனது வருமான வரி கணக்கினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இல்லை என்று கூறுகிறேன் என்றால் எனது வங்கி கணக்கில் திரையரங்கின் ஒரு நாள் வாடகை ரூ.3,600/- மற்றும் அதன் மடங்கு ரூ.7,200/- என்பனவாக பணம் செலுத்தப்பட்டது தெளிவாக உள்ளது.

முதல் விசாரணையில் திரையரங்க தொழில் எனது முதன்மை தொழில் இல்லை என கூறியுள்ளேன். முதியோர்களுக்கு வீடு கட்டி கொடுத்தல், வீட்டில் வைத்து பார்த்து கொள்ள முடியாத வயதானவர்களை எங்கள் மருத்துவமனையில் வைத்து பார்த்து கொள்கிறோம், ரியல் எஸ்டேட் தொழில் நான் செய்து வருகிறேன். திரையரங்க தொழில் அல்லாத மேற்படி தொழில்களின் நான் பெற்ற வருவாயை தான் எனது காரியதரிசி தேவதாஸ் ரூ.3,600/- மற்றும் அதன் மடங்கு ரூ.7,200/- என்பனவாக பணம் செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. எனக்கு

நாகப்பட்டினத்தில் வேறு எந்த தொழிலும் இல்லை கோவையில் மட்டும் உள்ளது. மேற்படி பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

என்னிடம் காட்டப்படும் **நாகப்பட்டினம் மாவட்ட நீதிமன்றத்தில் COS 100/2022 வழக்கில் நான் தாக்கல் செய்த வக்காலத்து, எதிர் வழக்குரை, மற்றும் இடைக்கால மனு எண்.3/2022, 04/2022, 05/2022, 06/2022, 07/2022 ற்கான நான் தாக்கல் செய்த எதிர் உரைகள் என்றால் சரி. மேற்படி ஆவணங்கள் எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் நாகப்பட்டினம் மாவட்ட நீதிமன்றத்தில் **எதிரியின் முன்பிணை மனுவிற்கு நான் தாக்கல் செய்த வக்காலத்து மற்றும் ஆட்சேபனை என்றால் சரி. அதேபோல எதிரி தாக்கல் செய்த பிணை மனுவிற்கு நான் தாக்கல் செய்த வக்காலத்து மற்றும் ஆட்சேபனை என்றால் சரி. மேற்படி ஆவணங்கள் எ.சா.ஆ.8 முதல் எ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

நான் கையெழுத்து பரிசோதனைக்காக DCB போலிசாரிடம் ஒப்புக்கொள்ளப்பட்ட எனது கையொப்பங்கள் அடங்கிய அசல் ஆவணங்களை ஒப்படைத்துள்ளேன். எனது மாதிரி கையொப்பங்கள் DCB அலுவலகத்தில் வைத்து பெறப்பட்டது நீதிமன்றத்தில் வைத்து பெறப்படவில்லை. எந்த தேதியில் எனது மாதிரி கையொப்பங்கள் DCB அலுவலகத்தில் வைத்து பெறப்பட்டது என்றால் நினைவில்லை. 11 மாத குத்தகை ஒப்பந்தத்தில் உள்ள எனது கையொப்பத்திலிருந்து மாறுபாடாக இருக்க வேண்டும் என்ற காரணத்தினால் தான் நான் போலிசாரிடம் சேர்ந்து DCB அலுவலகத்தில் வைத்து வேறு நபர் மூலமாக மாதிரி கையொப்பங்கள் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது ஒப்புக்கொள்ளப்பட்ட கையொப்பங்கள் அடங்கிய அசல் ஆவணங்கள் மூன்றாம் நபரை வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி உண்மை நிலவரம் தெரிய வரும் என்றால் காரணத்தினால் தான் எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.11 வரையிலான ஆவணங்களில் நான் ஒரே போல் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

23.12.2022 அன்று எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.11 வரையிலான ஆவணங்களை உட்படுத்தி

கையெழுத்து பரிசோதனை செய்யப்படவேண்டும் என எதிரி கொடுத்த கோரிக்கை மனுவானது நிராகரிப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2ம் எதிரி 1 ஆம் எதிரியின் மேலாளர் கிடையாது., அவர் எனக்கு கீழே பணிபுரிந்தவர் என்றால் சரியல்ல. போலிஸ் விசாரணையில் இரண்டாவது எதிரி 11 மாத குத்தகை ஆவணத்தை நான் ஏற்படுத்தி தந்தாக சொன்ன காரணத்தினால் தான்., அவர் இவ்வழக்கில் எதிரியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான்.